## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

முன்னிலை : திரு.எம்.ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பட்டுக்கோட்டை.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2 ஆம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு2054-ஸ்ரீசோபகிருது வருடம் ஆடித் திங்கள் 17 ஆம்நாள்

**இடைநிலை மனு எண் 3/ 2023**

**இன்**

**அசல் வழக்கு எண் 109/2022**

வின்சென்ட் சவரியார் ... மனுதாரர்/வாதி

**/ எதிர்/**

1. கிறிஸ்டின் பால்ராஜ்
2. அலங்காரமேரி ... எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள்

இம்மனு 19.07.2023-ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. பாலுச்சாமி அவர்கள் ஆஜராகி ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. பழனிவேலு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

## உத்தரவு

இந்த மனுவானது மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151 ன்படி ஆவணங்களை குறியீடு செய்ய மனுதாரருக்கு அனுமதி வழங்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.08.02 18:38:07 +0530

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்: -**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், மனுதாரரால் எதிர்வாதிகள் பேரில் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி தாவா தொடர்ந்துள்ளார் என்றும், எதிர்வாதிகள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றும், மனுதாரர் தரப்பு விசாரணைக்காக வாய்தா போட்டுள்ள நிலையில், மனுதாரரால் இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது என்றும, தற்போது தான் மனுதாரர் வீட்டில் பழைய பெட்டியில் இருந்து மனுதாரர் தேடிப்பார்த்தபோது தான் மனுதாரருக்கு மேற்படி ஆவணங்கள் கிடைத்தது என்றும், மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சிமாகவோ மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை என்றும், இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மனுதாரர் தரப்பிற்கு அவசியமான ஆவணங்கள் என்றும், அதனால் காலதாமதமாக தாக்கல் செய்யப்படுவதை மன்னித்து ஏற்றுக்கொணடு இந்த மனுவில் மனுதாரர் தரப்பு ஆவணங்களை குறியீடு செய்துகொண்டு வழக்கை மேல் நடத்த அனுமதிக்க வேண்டியது அவசியமும், நியாயமுமாக இருக்கிறது என்றும், அப்படிக்கு இல்லாதபட்சத்தில் மனுதாரருக்கு வீண் கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடியதாக இருக்கிறது என்றும், எனவே மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ளஅனுமதி அளிக்க வேண்டுமென கோரியுள்ளார்.

**3. 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்:-**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், இதில் இந்த எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மனுவின் இதர சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார் என்றும்,

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.08.02 18:38:22 +0530

பாகப்பிரிவினையில் இந்த எதிர்வாதிக்கு பாகவீதமாக சொல்லிவிடப்பட்ட வழக்கிடை சொத்து அதன் உரிமையாளரிடம் கிரயம் பெறாத சொத்து என்பதால் முன் உரிமையாளரிடம் இந்த எதிர்மனுதாரருக்கு பாக வீதமாக கிடைத்த சொத்துக்கு கிரய ஆவணம் உற்பத்தி செய்துகொண்டு வழக்கிடை சொத்தில் இந்த எதிர்மனுதாரரின் உரிமைக்கு எதிராக பாத்தியம் கொண்டாடியதால் அதனை ஏற்க இந்த எதிர்மனுதாரர் மீதும், அவரது மனைவியின் மீதும் கொடுக்கப்பட்ட புகார்களில் பிரஸ்தாப புகார்களும் அடக்கம் என்றும், மேற்கண்ட ஆவணங்கள் வழக்கு தொடர்வதற்கு முன்பாகவே மனுதாரரின் கைவசம் இருந்த ஆவணங்கள் என்றும், அந்த ஆவணங்களை வேண்டுமென்றே சமூகம் நீதிமன்றத்தில் பிராதுடன் தாக்கல் செய்யாமையால் அந்த ஆவணங்கள் உண்மையான ஆவணங்களாக இந்த எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதோடு, இந்த எதிர்மனுதாரருக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்படுத்த வேண்டி காலம் கடந்து இந்த ஆவணங்கள் முன்னிடப்பட்டுள்ளதால் இந்த மனு நிலைநிற்கத்தக்கதில்லை என்றும், எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளார்.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,
“ மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?
என்பதேயாகும்”.

<u>6. தீர்வு:-</u>

இரு தரப்பிலும் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலித்த வகையில் அசல் வழக்கானது மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர தடை உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதனை எதிர்த்து பிரதிவாதிகள் கட்சியாடி வந்த நிலையில், அசல்

M RAVICHANDRAN Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.08.02 18:38:39 +0530

வழக்கு வாதி தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு வாய்தா எழுந்த நிலையில், மனுதாரர், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்தாலும், அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் விசாரணை தொடங்காத நிலையில் இருப்பதாலும், அசல் வழக்கில் இரு தரப்பினருக்கும் போதிய வாய்ப்பு வழங்கினால் தான் அசல் வழக்கின் தீர்வுகளுக்கு ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தினால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் "Subject to proof and relevancy" அடிப்படையில் நீதியின் நலன் கருதி ஏற்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லச்சொல்ல அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2 ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.08.02 18:38:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.

**இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-

**இல்லை.**

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.08.02 18:38:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.